# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.161/2021</u>

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய எ.**ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ. 3 வரை குறியீடு செய்யப்படுகிறது.

<u>**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

TN 46 Q 7268 என்ற இருசக்கர வாகனம் என்னுடையது. விபத்து சமயத்தில் இந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். காப்பீடு இல்லாமல் வாகனத்தை ஓட்டுவது மோட்டார் வாகன சட்டத்தின் விதிமீறல் என்றால் சரிதான். என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் என் மீது தவறு இல்லை. என்னை காவல் பிணையில் விடுவித்தார். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து சமயத்தில் இல்லை. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாதற்கும், காப்பீடு இல்லாதற்கும் அபராதம் செலுத்தியுள்ளேன். என் மீது தவறு இல்லை என்று காவல் துறை மேல்அதிகாரி அவர்களுக்கு மனு எதுவும்

கொடுக்கவில்லை. சம்பவ சமயத்தில் மூன்று பேர் பயணம் செய்தோம். லிப்ட் கேட்டு வந்தார்கள். நான் மின்வாரியத்தில் மின்பாதை ஆய்வாளராக பணிபுரிகிறேன். பெரம்பலூர் மின்வாரிய Divisional Engineer அலுவலகத்தில் தான் எனக்கு சம்பளம் போடப்படும். நான் தான் உரிய ஆவணங்கள் இல்லாமல் வாகனத்தை இயக்கி மனுதாரரின் கணவரின் இறப்பிற்கு காரணமாக உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. காப்பீடு இல்லாத காரணத்தால் தேவையில்லாத விவரங்களை என்னுடைய எதிருரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் வந்தவர் உயிருடன் தான் இருக்கிறார். முத்தையா சம்பவ இடத்தில் இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியாது. பின்னால் தெரிந்து கொண்டேன். சம்பவ இடத்திற்கு ஹைவே போலீசார் உடனே வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர்களுக்கு நான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.